**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF II ADDITIONAL SPECIAL COURT FOR NDPS ACT CASES, MADURAI.**

*************

**Calendar**
**Miscellaneous**
**Preliminary Register**

| | |
|---|---|
| **Sessions** | **: CC 376/2025** |
| | **P.W. 2** |
| **Deposition of .PW- witness for prosecution** | **: Prosecution** |
| **Name** | **: திரு. வேல்மணிகண்டன்** |
| **Father's Name** | **: திரு. நடராஜன்** |
| **Village** | **: வடமதுரை** |
| **Taluk** | **: திண்டுக்கல்** |
| **Calling** | **: சார்பு ஆய்வாளர்** |
| **Religion** | **: இந்து** |
| **Age** | **: 42** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026.**

சாட்சி விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் – **4.35 P.M. A1 to A4 Accused are produced. A5 Accused absent. petition filed and allowed.**

<u>முதல் விசாரணை -</u>

1 முதல் 5 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் சாட்சி விசாரணையின் போது ஆஜரில் இருந்தார்கள்.

நான் தற்போது கானாவிலக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.12.2024 ம் தேதி

தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிநத் போது அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் குற்றத்தடுப்பு சம்மந்தமாக தேவதானப்பட்டி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து சென்ற போது 9.00 மணியளவில் கெங்குவார்பட்டி – வத்தலகுண்டு ரோட்டில் ஜி.கல்லுப்பட்டி வினோபா நகர் பிரிவு அருகில் உள்ள அன்பு இல்லம் அருகில் வந்து கொண்டிருந்த போது கிழக்கில் இருந்து மேற்காக TN 18 4050 பதிவெண் கொண்ட மாருதி சிப்ட் டிசைர் பழுப்பு நிற கொண்ட காரில் அதி வேகமாக வந்த காரை கை காட்டி நிறுத்தி உள்ளே இருந்த நபர்களிடம் பெயர் விலாசம் கேட்ட போது காரை ஓட்டி வந்த நபர் தன்னை பிரதீபன் என்றும் மற்றும் முன்னுக்கு பின்னால் தகவலை சந்தேகத்திற்கு இடமாக கூறியதன் பேரில் காரில் இருந்த மற்ற இருவரையும் விசாரித்த போது சந்திரன் என்றும் மற்றொருவர் சசிக்குமார் என்றும் கூறியதை காரை ஓட்டி வந்த டிரைவர் பிரதீபனிடம் காரின்பின் பக்க டிக்கியை திறந்து காண்பிக்கசொன்ன போது அவரே காரின் சாவியை எடுத்து பின் பக்க டிக்கியை திறந்து காண்பிக்க உள்ளே மெருண் கலர் சோல்டர் பேக் இருந்தது. அந்த பேக்கை திறந்து காண்பிக்க சொன்ன போது அதில் காப்பி கலர் டேப் ஒட்டப்பட்ட 5 பொட்டலங்கள் இருந்தது. அதில் ஒரு பொட்டலத்தை பிரதீபனை திறந்து காண்பிக்க சொன்ன போது கார் டிக்கிக்குள் வைத்து பிரதீபன் திறந்த போது அதில் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா போன்ற போதை வஸ்து இலை, காயந்த சருகு விதை, அடர் பச்சை பழுப்பு நிற கஞ்சா போன்ற பொருள் இருந்தது. உடனே 9.15 மணிக்கு தேவதானப்பட்டி வட்ட காவல் ஆய்வாளர் அவர்களிடம் கஞ்சா மற்றும் வாகனத்தை சோதனை செய்ய போன் மூலம் வாய்மொழி உத்தரவு பெற்றேன் என்று 9.25 மணிக்கு தேவதானப்பட்டி காவல்நிலையத்திற்கு போன் செய்து கஞ்சா ரெய்டு சம்மந்தமாக உபகரணங்கள், மடிக்கணினி, போர்ட்பிள் பிரிண்டர், மின் எடை தராசு, ஆகியவற்றை 2 காவலர்கள் மூலம் கொடுத்து கெங்குவார்பட்டி, கல்லுப்பட்டி, வினோபாநகர் பிரிவு, அன்பு இல்லம் அருகில் வர அறிவுறுத்தினோம். பின்பு காரில் இருந்த 3

நபர்களையும் விசாரித்த போது ஒருவர் பிரதீபன் த.பெ. முத்து, உத்தமபாளையம் என்றும் டிரைவர் சீட் அருகில் உட்கார்ந்து இருந்த சந்திரன், த.பெ. பால்ராஜ், உத்தமபாளையம் என்றும், டிரைவர் சீட் பின்புறம் அமர்ந்து இருந்த நபர் சசிக்குமார் என்றும் த.பெ. ராஜேந்திரன், உத்தமபாளையம் என்றும் கூறினார். பின்பு 9.30 மணியளவில் பிரதீபன், சந்திரன் , சசிக்குமார் ஆகிய மூவரிடமும் நீங்கள் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா கொண்டு வந்தது தெரிய வருகிறது. ஆதலால் உங்களை சோதனை செய்ய அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசு பதிவு பெற்ற அலுவலரிடமோ அழைத்துச் சென்று சோதனை செய்வதற்கான கோரும் உரிமை உங்களுக்கு உள்ளது என்று கூறியதில் பிரதீபன், சந்திரன், சசிக்குமார் ஆகிய மூவரும் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்பே சோதனை செய்யலாம் என்று கூறியதன் பேரில் 9.35 மணியளவில் பெரியகுளம் உட்கோட்டம் துணை வட்டாட்சியர் திரு. சதீஸ் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்பு 9.45 மணியளவில் தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் இருந்து த.கா. முகம்மது இஸ்மாயில் சேட், மு.நி.கா. ஈஸ்வரன், ஆகியோர் காவல் நிலையத்தில் இருந்து கொண்டு வந்த போர்ட்டபிள் பிரிண்டர், மடிக்கணினி, மின் எடை போடும் சாதனம் ஆகியவற்றை கொண்டுவந்தனர். பின்பு 10.15 மணியளவில் பெரியகுளம் உட்கோட்டம் துணை வட்டாட்சியர் திரு.சதீஸ் அவர்களுடன் கெங்குவார்பட்டி பிட்டு –1 , கிராம நிர்வாக அலுவலர் வினோபா நகர், அன்பு இல்லம் வந்தார்கள். அங்கு பிரதீபன், சந்திரன், சசிக்குமார் ஆகிய மூவரிடமும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவருக்கு 50(1) என்டிபிஎஸ் ஆக்ட் சோதனை செய்வதற்கான அறிவிப்பு கடிதத்தை வழங்கி மூவரிடமும் படித்து காண்பித்து அவர்களிடம் கையொப்பம் பெற்று வருவாய் அலுவலர்களிடம் தனித்தனியே கையொப்பம் பெற்று எனது கையொப்பம் தனித்தனியே செய்தேன். சோதனை உரிம அறிவிப்பு ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சோதனை செய்வதற்கு சம்மதம் தெரிவித்து கொடுக்கும் மனு ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு சோதனை சம்மதகடிதம்

கொடுத்த பின்பு காரை ஓட்டி வந்த பிரதீபனிடம் அவரே ஆஜர்படுத்திய 5 கஞ்சா பொட்டலங்களையும் எலெக்ட்ரானிக் தராசில் வருவாய் அலுவலர்கள் முன்னிலையில் எடை போட ஒரு பொட்டலத்தில் 1.900 கி.கி, 2 வது பொட்டலத்தில் 1.900 கி.கி , 3 வது பொட்டலத்தில் 1.887 கி.கி, 4 வது பொட்டலத்தில் 1.885 கி.கி, 5 வது பொட்டலத்தில் 1.900 கி.கி மொத்தம் 9.742 கி.கி இருந்தது. இது சம்மந்தமாக மூவரிடமும் பிரதீபன், சந்திரன், சசிக்குமார் ஆகியோரிடம் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா பொருள் இருப்பது தெரிய வந்தது. எந்த அனுமதியும் இல்லாமல் வாகனத்தில் எடுத்து வந்தது தொடர்பாக உங்களை கைது செய்வதற்கான அறிவிப்பை 50(2) என்டிபிஎஸ் ஆக்டின் படி வழங்கி 10.45 மணிக்கு மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவை பின்பற்றி கைதுக்கான காரணத்தை கூறி 3 நபர்களையும் கைதுக்கான அறிவிப்பை வழங்கி 1 வது எதிரி பிரதீபன் அவரிடம் விசாரித்த போது எந்த வித அச்சுறுத்தலும் துனபுறுத்தலும் இல்லாமல் தானே முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 11.00 – 11.45 மணி வரை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட அ.சா.ஆ.13 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரதீபன், சந்திரன், சசிக்குமார் மூவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் நண்பர்கள் என்பதாலும் தொடர்ந்து உத்தமபாளையம், கம்பம், அனுமந்தம்பட்டி பகுதியில் கஞ்சா வியாபாரம் செய்து வந்ததாகவும் மேலும் பிரதீபனுடைய மைத்துனன் சங்கரேஸ்வரன் கம்பம் பகுதியில் கஞ்சா வியாபாரம் செய்து கடந்த ஒராண்டுக்கு முன்பு கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் 22 கிலோ கஞ்சா வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார். அப்போது அவர் ரெகுலராக ஆந்திரா மாநிலம் சேர்ந்த சிவானி என்பவரிடம் தொடர்ந்து கஞ்சா வாங்கி வியாபாரம் செய்து வந்ததாகவும் அவர் சிறைக்கு சென்ற பிறகு சங்கரேஸ்வரன் மூலமாக சிவானி என்பவரை தன்னுடைய நண்பர் சந்திரன் பெயரில் வாங்கப்பட்ட மொபைல் எண் 7358514478 என்ற எண்ணில் இருந்து சிவானி மொபைல் எண் 9032888185

என்ற எண்ணிற்கு இன்டர்நெட் மற்றும் வாட்சப் கால் மூலமாக தொடர்பு கொண்டு கடந்த இரு முறை ஆந்திராவில் இருந்து கஞ்சா வாங்கி வந்து அனுமந்தம்பட்டியைச் சேர்ந்த ரவிக்குமார் மற்றும் அவரது நண்பர்களுக்கு அதிகபட்ச அளவில் கொடுத்து வியாபாரம் செய்தது தெரிய வந்தது. அதன் பிறகு 3 வது முறையாக கஞ்சா வாங்க ஆந்திரா செல்ல இருக்க ஒரு வாரத்திற்கு முன்பு ரவிக்குமாரிடம் கஞ்சா வாங்க பணமாக ரூ. 50,000/– பெற்று பிரதீபனும் ரூ.50,000/– ஏற்பாடு செய்து பிரதீபனும் சந்திரனும் ஆந்திராவிற்கு கடந்த 18.12.2024 ம் தேதி கம்பத்தில் இருந்து கேஆர்எஸ் டிராவல்ஸ் மூலமாக சென்னைக்கு சென்று அங்கிருந்து ஆந்திராவிற்கு ரயில் மூலமாக சீராளா சென்று அங்கிருந்து லோக்கல் பஸ் மூலமாக சிலுக்கானல்லூர் பேட்டை சென்று சிவானியை சந்தித்து பணம் ரூ. 1,00,000/– அவரிடம் கொடுத்து 2 சோல்டர் பேக்குகளில் 11 பொட்டலங்கள் தலா 2 கிலோ வீதம் 21.500 கிகி கஞ்சா வாங்கி கொண்டு வந்து 19.12.2024 ம் தேதியன்று பிரதீபனின் நண்பர் ரவிக்குமார் கூடலூர் வடக்கு காவல் நிலையத்தில் கஞ்சா வழக்கில் கைது செய்யப்பட்ட விபரம் தெரிய வர அன்றைய தினம் உத்தமபாளையத்திற்கு கிளம்பாமல் மறுநாள் 20.12.2024 ம் தேதி விஜயவாடாவில் உள்ள மதுரை விகேவி டிராவல்ஸ் மூலமாக தஞ்சாவூரில் இருந்து 21.12.2024 ம் தேதி காலை 7.00 மணியளவில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் வந்து இறங்கி அங்கு ஏற்கனவே வந்து காத்திருந்த சசிக்குமார், மற்றும் அவர் ஓட்டி வந்த வாகனம் TN 18 4050 மாருதி சிப்ட் டிசைர் பழுப்புநிற காரில் ஏறுவதற்கு முன்பாக தான் பயணித்த ரயில் டிக்கட், பஸ் டிக்கட்டை கீழே போட்டு தான் கொண்டு வந்த கஞ்சாவை பிரதீபன் 5 பாக்கெட்டுகளும், தனியாக சோல்டர் பேக்கில் எடுத்து காரின் டிக்கியில் வைத்துக் கொண்டார். உடன் வந்த சந்திரன் 4 கஞ்சா பொட்டலங்களை அவரது சோல்டர் பேக்கில் வைத்து சீட்டிற்கு கீழ் வைத்துக் கொண்டார். உடன் வந்த சசிக்குமார் 2 கஞ்சா பொட்டலங்களை தன்னிடம் பொறுப்பில் வைத்துக்கொண்டார். திருச்சியில் இருந்து சசிக்குமார் வந்த காரில் கிளம்பி

வையம்பட்டி டோல்கேட் வழியாக பாஸ்ட்டேக்கில் பணம் செலுத்திவிட்டு உத்தமபாளையம் நோக்கி வந்து கொண்டிருந்த போது கெங்குவார்பட்டி காட்ரோ செக்போஸ்டில் போலிஸ் சோதனை அதிகம் இருக்கும் என்பதால் வத்தலகுண்டு – கெங்குவார்பட்டி காட்ரோ வருவதற்கு சசிக்குமார் ஓட்டி வந்த காரை பிரதீபன் வாங்கி ஓட்டிவந்தார். ஓட்டி வரும் போது கெங்குவார்பட்டி, கல்லுப்பட்டி, வினோபா நகர் பிரிவில் அன்பு இல்லம் அருகில் சுமார் காலை 9.00 மணியளவில் போலிசார் பிடித்துவிட்டனர் என்ற விபரம் கூறினார். பின்பு அவர் பயன்படுத்திய Alcatal சிம் கார்டுடன் கூடிய பட்டன் செல்லையும் ரியல்மீ நார்சோ என்ற ஆண்ட்ராய்டு செல்போன் தன்னிடம் இருப்பதையும் உத்தமபாளையம் கனரா வங்கியில் தனக்கு வரவு செலவு இருப்பதையும் கூறினார். பின்பு அவர் வைத்திருந்த கஞ்சாவை அவரே ஆஜர்படுத்தி வருவாய் அலுவலர்கள் முன்னிலையில் கஞ்சாவை கொண்டு சென்ற எலெக்ட்ரானிக் தராசில் எடை போட்டு பின்பு அந்த கஞ்சாவில் காப்பி கலர் கவர் சுற்றி நூல் சுற்றி SHO சீல் வைத்து கையொப்பம் பெற்றும் அவர் கொண்டு வந்த கஞ்சாவை பி1 1.900 கி.கி என்றும் 1.900 கிகி பி2 என்றும் 1.887 கி.கி.பி3 என்று குறியீடு செய்தும், 1.885 கி.கி பி4 என்று குறியீடு செய்தும், 1.900 கி.கி பி5 என்று குறியீடு செய்தும் மற்றும் அவர் பயன்படுத்திய செல்போன் மற்றும் TN 18 4050 மாருதி சிப்ட் டிசைர் காரையும் 12.00 மணியளவில் அத்தாட்சியில் வருவாய் அலுவலர்கள் முன்னிலையில் கைப்பற்றி கையொப்பம் பெற்று பின்பு 2 வது எதிரி சந்திரன் என்பவரை விசாரித்த போது எந்த வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இல்லாமல் தானே முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 12.30 – 13.00 மணி வரை பதிவு செய்தேன். சந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.36 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சந்திரன் என்பவர் ஏற்கனவே பிரதீபன் சொன்ன அனைத்து விசயங்களையும் கூறினார். மற்றும் அவர் ரியல்மீ போன் வைத்திருப்பதாகவும் உத்தமபாளையம் கனரா வங்கியில் வரவு செலவு வைத்திருப்பதாகவும் பின்பு

எதிரி தானாக ஆஜர்படுத்திய 4 கஞ்சா பொட்டலங்களையும் மின்னனு தராசு மூலம் வருவாய் அலுவலர்கள் முன்னிலையில் எடை பார்த்ததில் தலா 1.880 கி.கி பி6 என குறியீடு செய்தும் 1.800 கி.கி பி7 என்று குறியீடு செய்தும் 1.800 கி.கி பி8 என்று குறியீடு செய்தும் 1.900 கி.கி பி9 என்று குறியீடு செய்தும் வருவாய் அலுவலர்களிடம் கையொப்பம் பெற்று எதிரி சந்திரன் பயன்படுத்திய ரியல்மீ செல்போன் மற்றும் கஞ்சா 13.15 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றியும் மற்றும் 3 வது எதிரி சசிக்குமார் என்பவர் 13.30 – 14.00 மணிவரை தானாக முன்வந்து எந்த வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இல்லாமல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.41 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர் வசம் இருந்த கஞ்சா பொட்டலங்களை வருவாய் ஆய்வாளர் முன்னிலையில் மின்னனு தராசில் எடை போட்டு பி10 1.890 கி.கி என்று குறியீடு செய்தும் 2.310 பி11 என்று குறியீடு செய்தும் எதிரி வைத்திருந்த ரெட்மீ செல்போன் ஆகியவற்றை 14.15 மணிக்கு வருவாய் அலுவலர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். எதிரிகள் மூவரையும் கைது செய்த விபரம் உறவினர்களுக்கு போன் மூலம் தெரிவித்தும் கைப்பற்றிய கஞ்சா மற்றும் வழக்கில் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாகனம், எதிரிகள் மூவரையும் 14.45 மணிக்கு நிலையம் கொண்டு வந்து தேவதானப்பட்டி வட்ட காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்து 57 என்டிபிஎஸ் ஆக்டின் படி விரிவான அறிக்கையை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அந்த விரிவான அறிக்கையில் ஆய்வாளர் மேற்குறிப்பு செய்துள்ளார். அந்த விரிவான அறிக்கை **அ.சா.ஆ.46** ஆகும். அன்றைய தினமே ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை 4 வது எதிரி தரப்பில்</u>**

இந்த வழக்கில் சம்பவம் நடந்த தேதி 21.12.2024 என்றால் சரி. 4 வது எதிரி ரவிக்குமார் மற்றொரு வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1 வது எதிரி

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டும் தான் தெரியும். நான் தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் எந்த தேதி வரை பணியில் இருந்தேன் என்றால் 27.12.2025 வரை இருந்தேன். 4 வது எதிரி எந்த குற்ற எண்ணில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நான் தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரி. சிசிடிஎன்எஸ் வலைதளத்தில் இந்த நபர் எந்த குற்ற எண், காவல் நிலையத்தில எதிரியாக உள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். உண்மையில் இந்த எதிரிக்கும் இந்த குற்ற எண்ணுக்கும் சம்மந்தம் இல்லாததால் தான் மேற்படி விபரங்களை விசாரணை செய்து ஆய்வாளரிடம் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் தான் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடி 1 வது எதிரியிடம் 4 வது எதிரி பண பரிவர்த்தனை செய்தது தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் கையில் பணம் கொடுததாக சொல்லியுள்ளார். கையில் பணம் கொடுத்ததாக எனது ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. ஆய்வாளர் விசாரணையில் எந்த தேதியில் பணம் கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஒரு வாரத்திற்கு முன்பு என்று தோராயமாக சொல்லியுள்ளேன். பிரிவு 57 ன் படியான அறிக்கையில் எந்த தேதியில் பணம் கொடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் சரி. 1 வது எதிரியிடம் 4 வது எதிரி பணம் கொடுத்தார் என்பதற்காக தனிநபர் சாட்சியை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. 1 வது எதிரியிடம் 4 வது எதிரி எந்த விதமான பணமும் கொடுக்கவில்லை என்றும் அதனால் தான் அது சம்மந்தமாக ஆவண ஆதாரங்களை நான் ஆய்வாளரிடம் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. 4 வது எதிரி மீது ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் வழககு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. 4 வது எதிரிக்கும் இந்த வழககிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் உயர் அதிகாரிகள் சொன்ன உத்தரவின் பேரில் எதிரியை இந்த வழக்கில் சேர்க்க

வேண்டும் என்று பொய்யாக ஒப்புதல் வாக்குமூலத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை 5ம் எதிரி தரப்பில்</u>**

கடந்த 21.12.2024ம் தேதி நான் வருவாய்துறை அலுவலர்கள் முன்னிலையில் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஷேக் மகபு சுபானி என்ற நபரின் பெயரோ அல்லது அவரது விலாசம், குடும்பம், மற்றும் பின்னனி பற்றிய விபரங்கள் இல்லை என்றால் சுபானி என்ற பெயர் உள்ளது, ஊர் பெயர் உள்ளது, குடும்பம், விலாசம் மட்டும் இல்லை. 1வது எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 5வது எதிரியினுடைய பெயர் உள்ளதா என்றால் இல்லை. சிவானி என்று உள்ளது. மற்ற நபர் கொடுத்த வாக்குமூலத்தில் சிவானி என்ற பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. நான் தாக்கல் செய்த அறிக்கையிலும் சிவானி என்ற பெயர் தான் உள்ளது என்றால் சரி. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை காவல் ஆய்வாளரிடம் கடந்த 21.12.2025 அன்று ஒப்படைத்தேன் என்றால் சரி. 5ம் எதிரியான ஷேக் மகபு சுபானியை நான் கைது செய்யவில்லை. ஷேக் மகபு சுபானியை கைது செய்வதற்காக நான் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் புகார் தாரார் மற்றும் நடவடிக்கை மேற்கொண்டு பொருட்களை கைப்பற்றியது நான் என்றால் சரி. என்னுடைய விசாரணையில் எந்த ஒரு ஆவணமும் எந்த ஒரு நபரும் ஷேக் மகபு சுபானியை பற்றி தெரிவிக்கவில்லை என்றால் சரி. சிவானி பற்றி தெரிவித்தார்கள். 5வது எதிரிக்கும் இந்த எதிரிக்கும் இந்த வழக்கு சொத்துக்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. 5ம் எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் வழக்கு சம்மந்தமாக எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரியின் கட்டாயத்தின் பேரில் அரசுக்கு ஆதரவாக ஆவணங்களை தயார் செய்து அதற்கு ஆதரவாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை 1 முதல் 3 எதிரிகள் தரப்பில்</u>**

சோதனை சம்மத கடிதத்தில் எனக்கு தகவல் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. எனக்கு வந்த தகவல் குறித்து பிரிவு 42(1)ன் படி தனியாக தகவல் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரி. பிரிவு 42(1)ன் படி வரப்படும் தகவலை தனித்தாளில் பதிவு செய்ய வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரி. பிரிவு 57ன் படியான விரிவான அறிக்கையில் ரோந்து சம்மந்தமாக கண்காணித்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த வழக்கு 21.12.2024 அன்று பதிவு செய்யப்பட்டது. அந்த சமயத்தில் புதிதாக கொண்டு வரப்பட்ட BNSS Actன் படி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வருகிறது என்றால் சரி. இது சம்மந்தமாக எனக்கும் என் உடன் பணிபுரிபவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டது என்றால் சரி. அதனால் எனக்கு BNSS Act ன்படியான விபரங்கள் தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். BNSS Act 105ன் படி கைது மற்றும் கைப்பற்றுதல் குறித்து வீடியோ ரெக்கார்டு செய்ய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது என்றால் சரி. ஆனால் இந்த வழக்கில் கைது மற்றும் கைப்பற்றுதல் நடவடிக்கை குறித்து வீடியோ உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொனன் தேதி நேரத்தில் இந்த மாதிரி சம்பவம் நடைபெறவில்லை என்றும் அதனால் தான் நான் பிரிவு 105 BNSS Act யை கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் விசாரணையின் போதும் ,இந்நீதிமன்ற விசாரணையின் போதும் மேற்படி ஆவணங்கள் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது யாரால்எங்கு வைத்து பதிவிறக்கம் செய்யப்பட்டது, யாரால் இடைசெறுகலாக எழுதப்பட்ட எழுத்துக்கள் யாரால் எழுதப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. இந்த ஆவணங்களில் மேற்படி கையெழுத்தானது துணை வட்டாட்சியர் தான்கையொப்பம் செய்தார் என்பதை உறுதிபடுத்தும் வண்ணம் அவரது கையொப்பத்திற்கு கீழ் அவரது பதவிக்கான முத்திரை எதுவும் இல்லை என்று சொன்னால் சரி. வினோபாவா நகர் 50 முதல் 60 வரை குடியிருப்புகள் உள்ள பகுதி என்றால் அதிகமாகவே இருக்கும்.

அருகில் கடைகள், வாகன போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரி. நானோ என்னுடன் வந்த சாட்சிகள் தனிநபர் சாட்சிகளை அழைகக முயற்சி செய்தோமா என்றால் யாரும் முன்வரவில்லை. யாரை அழைத்தோம் யார் முன்வரவில்லை என்பதை எனது ஆய்வாளர் விசாரணையிலும் நீதிமன்ற முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அதனால் தான் தனிநபர் சாட்சிகளை அழைக்கவில்லை என்றால் சரியல்ல. வாகன சோதனை செய்த போது தடுப்புகள் அமைத்து இருந்தோமா என்றால் இல்லை. அதிவேகமாக வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தோம். அந்த மாதிரி வாகனம் எதுவும் வரவில்லை என்றும் தற்சமயம் வாகனம் வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாகனத்தை சோதனை செய்ய பிரிவு 49 என்டிபிஎஸ் சட்டத்தின் கீழ் சோதனை சம்மத கடிதம் கொடுத்தோமா என்றால் இல்லை. நான் சொல்வது போல் வாகனம் எதுவும் வரவில்லை என்றும் வந்திருந்தால் பிரிவு 49ன் கீழ் சோதனை சம்மத கடிதம் கொடுத்திருப்போம் என்றால் சரியல்ல. எந்த வகையான தராசில் எடை போட்டோம் என்றால் எலெக்ட்ரானிக் தராசில் எடை போட்டோம். ஆய்வாளர் விசாரணையின் போது நீதிமன்ற முதல் விசாரணையிலும் யாரால் எடை போடப்பட்டது, எத்தனை முறை எடை போடப்பட்டது யாரால் குறிப்புகள் எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் 5 பொட்டலங்கள் நீள அகலம் என்ன என்றால் நாங்கள் அதை குறிப்பிட்டு எழுதவில்லை. ஒவ்வொரு பொட்டலங்களில் இருந்தும் மாதிரிகள் சம்பவ இடத்தில் வைத்து எடுத்தோமா என்றால் சம்பவ இடத்தில் வைத்து நான் எந்த மாதிரிகளையும் எடுக்கவில்லை. வழக்கு சொத்தை குறியீடு மட்டும் தான் செய்தேன். கைப்பற்றப்பட்ட பொட்டலங்களை நான் பிரித்தேனா என்றால் நான் பிரிக்கவில்லை. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொட்டலத்திற்குள் உள்ளே என்ன

இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கஞ்சா போன்ற பொருள் இருந்தது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும ஒவ்வொரு பொட்டலத்தையும் நான் உள்ளே என்ன உள்ளது என்று பிரித்து பார்த்தேனா என்றால் ஒரு பொட்டலத்தை மட்டும் தான் பார்த்தேன். அதை பிரித்து பார்த்தால் தான் அதில் பூ, விதை, தண்டுகள் எவ்வளவு இருந்தது என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. பொதுவாக கைப்பற்றப்படுவதாக சொல்லப்படும் கஞ்சா தான் என்பதை உறுதிபடுத்தும் வண்ணம் என்னால் மாதிரிகள் சம்பவ இடத்தில் வைத்து எடுக்கப்படவில்லை என்றால் சரி. நான் சொல்வது போல் 1வது எதிரியோ 2 மற்றும் 3 வது எதிரியோ யாரும் எந்த விதமான கஞ்சாவும் என் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. இந்தவழக்கில் தனித்தனியாக சான்றுபொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. 3 எதிரிகளும் ஒருவருக்கொருவர் தொடர்பு அற்றவர்கள் என்றும் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 3 எதிரிகளையும் ஒரே நேரத்தில் கைது செய்ததாகவும் ஒரே நேரத்தில் சான்றுபொருட்கள் கைப்பற்றப்பட்டதாக கூறினால் வணிக அளவிலான வழக்கு வரும் என்பதால் மேற்படி இந்த வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்ன தேதி நேரத்தில் எந்த விதமான கஞ்சாவும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும் இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு எதிரிகளை மிரட்டி ஆவணங்களில் கையொப்பம் பெற்றுவிட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

முடிவுற்ற நேரம் : 7.00 P.M.